**O.S.No. : 01/2016**

Dated: 05.03.2026

**பி.வா.சா.1: பிரியா ; த/பெ.ஸ்ரீனிவாசன் (இறப்பு)**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. எனது கணவர் பெயர் மஞ்சுநாத் என்றால் சரிதான். எனக்கு எந்த வருடம் திருமணமானது என்றால் 2020 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. எனது திருமணம் கிறிஸ்துவ முறைப்படி நடைபெற்றது என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் வாதி என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்றால் எனது தாத்தா எழுதிக்கொடுத்த செட்டில்மண்ட் பத்திரத்தை ரத்து செய்துள்ள நிலையில் வாதி சொத்து தனக்கு பாத்தியப்பட்டது என்று பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்தும், இதர சொத்துக்களும் எனது தாத்தா சுயமாக சம்பாதித்த சொத்துக்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, எனது தகப்பனாருக்குத்தான் தெரியும்.

2. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தாவா சொத்து பரம்பரை சொத்து என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல, அது எனது தாத்தா சொத்து என்றும், அதில் அனைவருக்கும் பங்கு உள்ளது என்றும் கூறியுள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் எதிர்வழக்குரை இந்த வழக்கில் நானும், எனது தாயாரும் சேர்ந்து தாக்கல் செய்தது என்றால் சரிதான். எதிர்வழக்குரை பத்தி-5-ல் தாவா சொத்து பரம்பரை சொத்து என்று கூறியுள்ளது தவறா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. இந்த வழக்கு எவ்வளவு பரப்பளவு உள்ள சொத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, எனது தந்தையாருக்குத்தான் தெரியும்.

3. தாவா சொத்தின் அருகிலேயே எனது தந்தையாருக்கு பதிவு செய்யப்படாத செட்டில்மண்ட் பத்திரம் மூலம் எனது தாத்தா பூமி கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தற்போது குடியிருந்து வரும் கதவு எண் 90/C கொண்ட கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கட்டிட அனுமதி வழங்கப்படாத கட்டிடத்தில்

குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல, நாங்கள் நீண்ட காலமாக அங்குதான் வசித்து வருகிறோம். எனது தகப்பனார் 2022 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தகப்பனார் உயிருடன் இருக்கும்வரை வாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட செட்டில்மண்ட் பத்திரம் குறித்து ஏதாவது ஆட்சேபனை தெரிவித்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. எனது தாத்தா இறந்தபிறகு தாவா சொத்திற்கு அருகிலேயே எனது தாத்தா மற்றும் பாட்டி குடியிருந்த இடத்தில் தற்போது எனது அத்தை ருக்குமணி என்பவர் ஒரு பகுதியில் குடியிருந்து வருகிறார் என்றால் எனது தாத்தா மற்றும் பாட்டி குடியிருந்து வந்த வீட்டில் எனது இரு அத்தைகளான மீனா மற்றும் ருக்கு ஆகிய இருவரும் தற்போது குடியிருந்து வருகிறார்கள். மேற்படி 3 ¾ சென்ட் சொத்தில் ஒரு பகுதியில் எனது தகப்பனார் குடியிருந்து வந்தார் என்றும், அதில்தான் தற்போது நான் குடியிருந்து வருகிறேன் என்றும் சொன்னால் சரிதான், அதில் நாங்கள் எங்கள் தாத்தா காலத்திலிருந்து குடியிருந்தே வருகிறோம். எனது தாத்தா லிங்கன் என்பவர் அனைவருக்கும் பாகம் பிரித்து கொடுத்துள்ளார் என்றும், அதுபோல வாதி குமாருக்கும் செட்டில்மண்ட் பத்திரம் மூலம் பாகம் கொடுத்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல, நாங்கள் எங்கள் தாத்தா காலத்திலிருந்தே அங்கு குடியிருந்து வருகிறோம், ஆனால் வாதி குமார் கடந்த ஆறு மாதத்திற்கு முன்பிருந்துதான் அங்கு குடியிருக்கிறார்.

5. இந்த வழக்கில் வாதிக்கு சாதகமாக இடைக்கால உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருவதால்தான் அவருக்கு ஆதரவாக இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 7 ஆம் பிரதிவாதி ருக்குமணி என்பவர் இதற்கு முன்பு திருமணமாகி தோனி பங்களா என்ற இடத்தில்தான் குடியிருந்து வந்தார் என்றும், தற்போதுதான் அவருக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தில் குடியிருந்து வருகிறார் என்றும் சொன்னால் சரியல்ல, அவருக்கு பாகம் கொடுக்கப்படவில்லை, எனது பாட்டி இறந்தபிறகு அவராகவே அங்கு வந்து தற்போது குடியிருந்து வருகிறார்.

6. எனது அத்தை மீனா என்பவர் முன்பு அவரது மகனுடன் உதகை பாம்பே காஸ்டில் என்ற பகுதியில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். தற்போது அவர் எனது தாத்தா பாட்டி குடியிருந்த இடத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான், அவர் எனது பாட்டி உயிருடன் இருக்கும்போதே எனது பாட்டியிடம் கேட்டு அங்கு குடி வந்தார். எனது தாத்தா அனைவருக்கும் பாகம் கொடுத்துள்ளது போல வாதி குமாருக்கும், செட்டில்மண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், அதனால்தான் செட்டில்மண்ட் பத்திரத்தை ரத்து செய்ததை நாங்கள் யாரும் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரியல்ல, எனது தாத்தா உயிருடன் இருக்கும்போதே செட்டில்மண்ட் பத்திரத்தை ரத்து செய்துவிட்டார்.

7. அதனால்தான் வருவாய் ஆவணங்களில் தற்போதும் வாதியின் பெயர் உள்ளது என்றால் சரியல்ல, அது போலியான ஆவணமாகும், அதை வைத்து கொண்டு வாதி சொத்து தனக்கு சொந்தமானது என்று கூறி வருகிறார், செட்டில்மண்ட் பத்திரம் ரத்து செய்யப்பட்டுவிட்டது. எனது தாத்தா அனைவருக்கும் சொத்து கொடுத்ததுபோல வாதிக்கும் செட்டில்மண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்ததால்தான் செட்டில்மண்ட் பத்திரத்தை ரத்து செய்வதற்கு முன்பும், ரத்து செய்த பின்பும் அது குறித்து வாதிக்கு எந்தவித அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல, எனது தாத்தா எனது தந்தையிடம் அனைவருக்கும் பங்கு வர வேண்டும் என்பதால்தான் செட்டில்மண்ட் பத்திரத்தை ரத்து செய்ததாக கூறியுள்ளார். எனது தாத்தா செட்டில்மண்ட் பத்திரம் ரத்து செய்தது குறித்து வாதிக்கு அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல, அனுப்பியுள்ளார், வாதிக்கும் செட்டில்மண்ட் பத்திரம் ரத்து செய்யப்பட்ட விவரம் தெரியும், அது குறித்து அவர் காவல் நிலையத்திலும் தெரிவித்துள்ளார்.

8. காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது தொடர்பான ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, ஆனால் எனது தாத்தா காவல் நிலையத்தில் செட்டில்மண்ட் பத்திரம் ரத்து செய்தது குறித்து தெரிவித்துள்ளார். வாதி குமார் செட்டில்மண்ட் பத்திரத்தின் அடிப்படையில் கட்டிட அனுமதி பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி செட்டில்மண்ட் பத்திரத்தின்

அடிப்படையில்தான் வாதி பெயருக்கு வா.சா.ஆ.6 கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, செட்டில்மண்ட் பத்திரம் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்ற விவரம்தான் எனக்கு தெரியும்.

9. கட்டிட அனுமதியை ரத்து செய்யும்போது வாதிக்கு அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிக்கு வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல, எனது தாத்தா உயிருடன் இருக்கும்போதே செட்டில்மண்ட் பத்திரத்தை ரத்து செய்துவிட்டார். தாவா சொத்தில் வாதி குமார்தான் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல, எனது தாத்தா உயிருடன் இருக்கும் காலத்திலிருந்தே நாங்கள்தான் அங்கு குடியிருந்து வருகிறோம்.

**மறுவிசாரணை**: இல்லை

Loganathan Prakash

Digitally signed by Loganathan Prakash
Date: 2026.03.05 19:43:11 +0530